# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

(பதிவு எண் : 982 / 2012)

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

**சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி**

## கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அந்த நாட்டின் உயர்கல்விக்கான வாய்ப்புகளைப் பொருத்தே அமைகிறது. இளைஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திலும் மக்கள் நலனைத் தீர்மானிப்பதிலும், நாட்டில் உயர்கல்வி பயின்றவர்களின் எண்ணிக்கை முக்கிய காரணியாக உள்ளது. பள்ளிக் கல்வியில் இந்தியா முன்னேற்றம் அடைந்திருந்தாலும், குடும்ப வறுமையின் காரணமாக ஏராளமான மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரமுடியாமல் இருக்கின்றனர். தமிழகத்தில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் கல்வியில் முன்மாதிரி மாவட்டமாக விளங்க வேண்டும். நமது மாவட்டத்தில் மேல்நிலைப் பள்ளிக்கல்வியை முடித்த அனைத்து மாணவர்களுக்கும் உயர்கல்வி பயில, வாய்ப்பு வழங்கி, அனைத்து ஏழை எளிய மாணவர்களும் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயில உதவி செய்ய வேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை தொடங்கப்பட்டு வெற்றிக்கரமாகச் செயல்பட்டு வருகிறது.

## அறக்கட்டளையின் செயல்பாடுகள்

- உயர்கல்வியின் தேவை மற்றும் சிறப்பைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் தேர்ச்சிபெறும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி பயிலக் கல்வி உதவித்தொகை வழங்குதல்.
- இளைஞர்களுக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்து, வேலை வாய்ப்புக்கான தகுதிகளை மேம்படுத்துதல்.
- இளைஞர் சமுதாயத்தை ஒரு திறன்மிக்க ஆற்றல் வாய்ந்த மனிதவளமாக உருவாக்குதல்.

## "HEARTS" (Higher Education for All to Realize Transformation of the Society) திட்டம்

இத்திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் +2 முடித்த பொருளாதார வசதியில்லாத 6,684 மாணவர்கள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் தங்குதடையின்றிப் படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகை பெற்றவர்களில் 3 இல் 2 பங்கு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அறக்கட்டளை உறுப்பினர்கள்



## "ASPIRE" (Action to Support Poor students In Reaching Excellence) திட்டம்

இத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்கள் உயர்கல்வி பயில வாய்பாக ஒவ்வொரு மாணவர்க்கும், ஒரு கல்விக் கொடையாளரை அறக்கட்டளையின் மூலம் இணைக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி...

- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களின் உயர்கல்விக் கட்டணத்தை ஏற்கலாம்.
- தங்களுக்குத் தெரிந்த கல்லூரியில் தங்களின் பரிந்துரையின் பேரில் மாணவர்களுக்குக் கட்டணம் இல்லாமல் படிக்க உதவி செய்யலாம்.
- தங்களுக்குத் தெரிந்த (அ) தாங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் மூலமும் நிதியைப் பெற்று அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கலாம்

ASPIRE-திட்டம் பற்றிய காணொளியைக் காண QR Code-யை SCAN செய்யவும்

(கொடையாளர்கள் தங்களால் இயன்ற நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கலாம்).

## மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிக்காட்டி நிகழ்வுகள்








**"HEARTS"** (Higher Education for All to Realize Transformation of the Society) திட்டத்தின் மூலம் உயர்கல்வி தேவை மற்றும் சிறப்பு பற்றிப் பெற்றோர் மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. 2020 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் 71 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் (குறிப்பாகப் பின்தங்கிய கிராமப்புற பகுதிகளில்) 12 ஆம் வகுப்பு பயிலும் 6,273 மாணவர்களுக்கு உயர்கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளது.

## ஆளுமை மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி




கடந்த 28.01.2020 அன்று அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் வாணியம்பாடி இஸ்லாமிய பெண்கள் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையும் இணைந்து அக்கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு ஒரு நாள் ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்துச் சான்றிதழ் வழங்கியது.

## தகவல் தொழில்நுட்பத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும், தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமான சென்னையில் உள்ள ஆஸ்பயர் சிஸ்டமும் இணைந்து ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்திலுள்ள பட்டதாரி மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்குவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி ஏழாவது பகுதி மாணவர்களுக்கு விஜடி வளாகத்தில் கடந்த டிசம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை நான்கு மாதம் பயிற்சி அளித்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதுவரை 115 (90%) பயிற்சி முடித்த மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் மென்பொருள் பொறியாளர்களாகப் பணிபுரிகின்றனர்.

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்



**சா. துர்கா**

நான் காட்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் +2 இல் 990 மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றேன். நான் +2 படிக்கும்போது என்னுடைய பள்ளிக்கு **அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை** அலுவலர்கள் வருகை தந்து +2 படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி பற்றிப் விழிப்புணர்வு அளித்தனர். மேலும் அறக்கட்டளை, பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி உதவி வருதாகக் குறிப்பிட்டனர். நான் காட்பாடி அடுத்த கரிகிரி கிராமத்தில் வசிக்கிறேன். எனக்கு ஒரு தம்பி, ஒரு தங்கை உள்ளனர், அவர்களும் அரசுப் பள்ளியில் படிக்கின்றனர். என்னுடைய அம்மா, கரிகிரி கிராமத்தில் ஒரு சிறிய வாட்டர் கம்பெனியில் தினக்கூலியாக வேலை செய்து எங்களைப் படிக்க வைக்கிறார். நான் அறக்கட்டளையின் உதவி பெற்று SIH - R & LC கரிகிரி மருத்துவமனையில் DGNM படித்து முடித்தேன். நான் படித்த மூன்று ஆண்டுகளும் எனக்கு அறக்கட்டளை உதவி செய்தது. இப்பொழுது நான் படித்து முடித்து SIH - R & LC கரிகிரி மருத்துவமனையில் செவிலியராகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக் கனவை நனவாக்கிய அறக்கட்டளைக்கு நன்றி.

---



**ந. ஜெகன்**

நான் காட்பாடி அடுத்த கார்ணாம்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய குடும்பம் விவசாயக் குடும்பம். எனக்கு ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் உள்ளனர். நான் ஸ்ரீ இராமகிருஷ்ணா பெல் மேல்நிலைப் பள்ளியில் +2 இல் 1004 மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெற்றேன். என்னுடைய பள்ளித் தலைமையாசிரியர், **அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை** பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி உதவி வருவதாகத் தெரிவித்தார். நான் வேலூர் தொழில் நுட்பக் கல்லூரியில் M.S. Software சேர்ந்தேன். பின்பு அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் விண்ணப்பித்து, உதவித்தொகை பெற்றுக் கல்லூரிப் படிப்பை முடித்து, தற்போது சென்னையிலுள்ள TCS நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராகப் பணிபுரிந்து வருகிறேன். தற்போது என் குடும்பப் பொருளாதாரச் சுமை குறைந்து வருகிறது. என் குடும்பத்தின் சார்பாக அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்வி உதவித்தொகை பெற்றவர் : 6,684

- இவர்களில் 4,392 (65.71%) பெண்கள்
- 4,558 (68.19%) முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்கள்
- 6,256 (93.59%) கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் செவிலியர் படிப்பு படிக்கும் மாணவர்கள் அதிகமாகப் பயன் பெற்றிருக்கிறார்கள்
- 6,107 (91.37%) மாணவர்கள் அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்றவர்கள்
- 16.07% தாய்/தந்தை இழந்த பயனாளிகள்
- 81.58% மாணவர்கள் +2 இல் 80% க்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள், அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமின்றிக், குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கும் அறக்கட்டளை, முக்கியத்துவம் அளித்து அவர்களின் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு உதவி வருகிறது
- இதுவரை 2,755 மாணவர்கள் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்துள்ளார்கள்; இதில் 917 மாணவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்
- 507 மாணவர்கள் முதுகலைப் படிப்புகளில் சேர்ந்து பயின்று வருகிறார்கள்




இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

### முகவரி

திட்ட ஒருங்கிணைப்பாளர்
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 0416 - 224 7777, 220 2196

### வங்கி விவரம்

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore Dt. - 632 014.
Swift Code : IDIBINBBTSY
IFSC Code : IDIB000V086

இசைபட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!
மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!